## December 20, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. ஆஸ்திரேலியாவின் சிட்னி நகரிலுள்ள போண்டி கடற்கரை பகுதியில் கடந்த 13-ஆம் தேதி நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதலின் எதிரொலியாக, பொதுமக்களிடமிருந்து துப்பாக்கிகளைத் திரும்ப வாங்கும் புதிய திட்டத்தை அந்த நாட்டு அரசு தொடங்கவுள்ளது. இது குறித்து பிரதமர் அந்தோனி ஆல்பனீஸி கூறியதாவது:

    i. போண்டி கடற்கரை தாக்குதலைத் தொடர்ந்து, துப்பாக்கிகளைத் திரும்ப வாங்கும் பெரிய திட்டத்தைத் தொடங்குகிறோம். இது கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் போர்ட் ஆர்தர் படுகொலையின் போது நடத்தப்பட்டதை விட பெரிய அளவிலான துப்பாக்கி சேகரிப்புத் திட்டமாக இருக்கும். இந்த திட்டத்தின் கீழ் லட்சக்கணக்கான துப்பாக்கிகள் திரும்பப் பெறப்பட்டு அழிக்கப்படும்.

    ii. போண்டி கடற்கரையில் நடைபெற்ற யூதர்களின் ஹனுக்கா கொண்டாட்டத்தின்போது, அவர்களைக் குறிவைத்து இந்தியாவைப் பூர்விகமாகக் கொண்ட சஜித் அக்ரம் (50) மற்றும் அவரது மகன் நவீத் அக்ரம் நடத்திய சரமாரி துப்பாக்கிச்சூட்டில் 15 பேர் உயிரிழந்தனர்.

2. ரஷியாவின் முடக்கப்பட்ட சொத்துகளைப் பயன்படுத்தாமலேயே, உக்ரைனுக்கு 9,000 கோடி யூரோ (சுமார் ரூ.9.5 லட்சம் கோடி) வட்டியில்லா கடனுதவி அளிக்க ஐரோப்பிய யூனியன் தலைவர்கள் முடிவு செய்துள்ளனர். இது குறித்து எக்ஸ் ஊடகத்தில் ஐரோப்பிய கவுன்சில் தலைவர் அன்டோனியோ கோஸ்டா வெளியிட்டுள்ள பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

    i. உக்ரைனுக்கு 2026-2027-ஆம் நிதியாண்டுக்கான செலவுகளுக்காக 9,000 கோடி யூரோ கடனுதவி அளிக்க ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இந்தக் கடன் தொகை ஏற்கெனவே விவாதிக்கப்பட்டதைப் போல் ஐரோப்பிய யூனியன் உறுப்பு நாடுகளில் முடக்கி வைக்கப்பட்டுள்ள ரஷிய சொத்துகளில் இருந்து அளிக்கப்படவில்லை. அதற்கு மாறாக, ஐரோப்பிய யூனியன் பட்ஜெட்டை உத்தரவாதமாக வைத்து சர்வதேச மூலதனச் சந்தையில் இருந்து கடனாக வாங்கி வழங்கப்படும் என்று உச்சி மாநாட்டின் இறுதி வரைவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

    ii. ஐரோப்பிய யூனியன் நாடுகளிடம் உள்ள ரஷியாவின் 21,000 யூரோ (சுமார் ரூ.22.20 லட்சம் கோடி) மதிப்பிலான சொத்துகளில் பெரும்பாலானவை பெல்ஜியத்தில் உள்ள யூரோக்ளியர் அமைப்பில் உள்ளன. இதை உக்ரைனுக்குக் கடனாக வழங்க பெல்ஜியம் உள்ளிட்ட சில உறுப்பு நாடுகளே எதிர்ப்பு தெரிவித்தன.

    iii. ரஷிய அதிபர் விளாதிமீர் புதினுக்கு நெருக்கமானவராக அறியப்படும் ஹங்கேரி பிரதமர் விக்டர் ஆர்பன் இந்த திட்டத்தை நிராகரித்தார். மால்டா, பல்கேரியா, செக் குடியரசு ஆகிய உறுப்பு நாடுகளும் இந்த திட்டம் குறித்து சந்தேகம் எழுப்பின.

    iv. இந்தத் திட்டத்துக்கு ஐரோப்பிய யூனியனின் 27 உறுப்பு நாடுகளில் குறைந்தது 15 நாடுகள், அதுவும் 65 சதவீத மக்கள் தொகையை பிரதிநி தித்துவப்படுத்தும் நாடுகளின் ஆதரவு தேவை என்ற சூழலில், முடக்கப்பட்ட ரஷிய

சொத்துகளைப் பயன்படுத்தாமலேயே மிகப் பெரிய தொகையை உக்ரைனுக்கு கடனாக அளிக்க முடிவு எட்டப்பட்டது.

- டென்மார்க் பிரதமர் மேட்டே ஃப்ரெட்ரிக்சென்,
- ஐரோப்பிய யூனியன் கவுன்சில் தலைவர் அன்டோனியோ கோஸ்டோ,
- ஐரோப்பிய யூனியன் தலைவர் உர்சுலா வொண்டர் லெயென்

3. தகவல் மற்றும் தகவல்தொடர்பு தொழில்நுட்ப (ஐசிடி) சாதனங்கள் மீதான வரிகள், சூரிய மின் உற்பத்தி மானியங்கள் தொடர்பாக இந்தியாவுடன் ஆலோசனை நடத்த வேண்டும் என்று உலக வர்த்தக அமைப்பிடம் சீனா மனு அளித்தது.
   i. இந்தியாவின் வரி மற்றும் மானியங்கள் உலகவர்த்தக அமைப்பின் பல்வேறு விதிமுறைகளுக்கு எதிராக இருப்பதாகவும், இது சீனாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் அந்த மனுவில் சீனா தெரிவித்துள்ளது. இது தொடர்பாக உலக வர்த்தக அமைப்புக்கு அளித்துள்ள வாக்குறுதிகளை இந்தியா பின்பற்ற வலியுறுத்த வேண்டும் என்றும் அந்த மனுவில் சீனா கோரியுள்ளது.

   ii. மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரி தயாரிப்புத் துறைகளில் இந்தியாவின் மானிய நடவடிக்கைகள் நியாயமற்ற முறையில் இருப்பதாகவும், இது சீனாவுக்குப் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் கடந்த அக்டோபரில் உலக வர்த்தக அமைப்பிடம் சீனா மனு அளித்தது குறிப்பிடத்தக்கது.

4. மத்திய பட்ஜெட்டை வரும் பிப்ரவரி 1-ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை) நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்ய உள்ளார்.
   i. மத்திய பட்ஜெட் கடந்த 2017-ஆம் ஆண்டு முதல் பிப்ரவரி 1-ஆம் தேதி தாக்கல் செய்யப்படுகிறது. வரும் 2026-ஆம் ஆண்டு பிப்ரவரி 1-ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை வருகிறது. எனவே நாடாளுமன்ற மரபுகளின்படி மத்திய பட்ஜெட்டை பிப்ரவரி 1-ஆம் தேதி (ஞாயிறு) நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமன் தாக்கல் செய்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வழக்கமாக நாடாளுமன்றம் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் நடத்தப்படாது என்பது குறிப்பிடத்தக்கது. எனினும், பட்ஜெட்டுக்காக அன்று நடத்தப்படுவதற்கான வாய்ப்பு உருவாகியுள்ளது.

   ii. கடந்த 2017-ஆம் ஆண்டுக்கு முன்பு வரை பிப்ரவரி மாதத்தின் கடைசி நாளில் மத்திய பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டு வந்தது. பட்ஜெட் தாக்கல் செய்யப்பட்டபின் மானியக் கோரிக்கைகள் தொடர்பாக மத்திய அரசு ஒரு மசோதாவைக் கொண்டுவந்து நிறைவேற்றுவது வழக்கம்.

   iii. கடந்த 2017-ஆம் ஆண்டில் அப்போதைய மத்திய நிதி அமைச்சர் மறைந்த அருண் ஜேட்லியால் பிப்ரவரி 1-ஆம் தேதி பட்ஜெட் தாக்கல் செய்யும் நடைமுறை தொடங்கிவைக்கப்பட்டது. இவ்வாறு தாக்கல் செய்யப்படும் மத்திய பட்ஜெட்டுக்கு மார்ச் மாத இறுதிக்குள் நாடாளுமன்றத்தால் ஒப்புதல் பெறப்படுகிறது.

   iv. இதைத் தவிர வேறு சில சிறப்பு சூழல்களில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் ஞாயிற்றுக்கிழமை நடத்தப்பட்டது. உதாரணமாக, 2020-ஆம் ஆண்டில் கரோனா

பரவல் தொற்று குறித்து விவாதிக்கவும், 2012-ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தின் முதல் அமர்வின் 60-ஆம் ஆண்டு விழாவையொட்டியும் ஞாயிற்றுக்கிழமைகளில் நாடாளுமன்ற கூட்டத்தொடர் நடத்தப்பட்டது.

5. அமெரிக்காவின் தகவல்தொடர்பு செயற்கைக்கோளை இந்தியாவின் எல்விஎம் 3 ராக்கெட் மூலம் வரும் டிச.24-ஆம் தேதி விண்ணில் செலுத்த இஸ்ரோ திட்டமிட்டுள்ளது.
   i. இந்திய விண்வெளி ஆய்வு மையத்தின் (இஸ்ரோ) கீழ் செயல்படும் நியூ ஸ்பேஸ் இந்தியா லிமிடெட் நிறுவனம் வெளிநாட்டு செயற்கைக்கோள்களை விண்ணுக்கு அனுப்பும் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இந்நிறுவனம் இதுவரை 430-க்கும் மேற்பட்ட வெளிநாட்டு செயற்கைக்கோள்களை வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

   ii. பெரும்பாலான உலக நாடுகளின் விண்வெளி ஆய்வு நடவடிக்கைகளுக்கு பங்களித்து வரும் இஸ்ரோ, அமெரிக்காவின் ஏஎஸ்டி ஸ்பேஸ் மொபைல் நிறுவனத்தின் ப்ளூ பேர்ட்-6 என்ற தகவல்தொடர்பு செயற்கைக்கோளை எல்விஎம் 3 (ஜிஎஸ்எல்வி மார்க்-3) ராக்கெட் மூலம் செலுத்தும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறது. இதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் இரு தரப்புக்கும் இடையே மேற்கொள்ளப்பட்டது.

   iii. அதன்படி ப்ளூ பேர்ட்-6 செயற் கைக்கோள் எல்விஎம் 3 ராக்கெட் மூலம் ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள இரண்டாவது ஏவுதளத்திலிருந்து டிச. 24-ஆம் தேதி காலை 8.55 மணிக்கு விண்ணில் ஏவப்படவுள்ளது. இதற்கான முன்னேற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

   iv. தகவல்தொடர்பு சேவைக்கான புளூபேர்ட் செயற்கைக்கோள் 6,500 கிலோ எடைகொண்டது. இஸ்ரோ இதுவரை விண்ணில் செலுத்தியதிலேயே இதுதான் அதிக எடையுள்ள செயற்கைக்கோள். தொலைதூரப் பகுதிகளுக்கு கைப்பேசி இணைப்பு, அதிவேக 5ஜி இணையதள சேவைகளை வழங்க இந்த செயற்கைக்கோள் உதவும்.

6. நாடாளுமன்ற குளிர்கால கூட்டத் தொடர் நிறைவடைந்தது. இதில் வளர்ந்த பாரத ஊரக வேலை வாய்ப்பு மற்றும் வாழ்வாதார உறுதியளிப்புத் திட்ட (வி பி-ஜி ராம் ஜி) மசோதா உள்பட 8 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.
   i. விபி-ஜி ராம் ஜி மசோதா, பொதுப் பயன்பாட்டுக்கான அணுசக்தித் துறையில் தனியார் பங்கேற்பை அனுமதிக்கும் மசோதா, காப்பீட்டுத் துறையில் 100 சதவீத அந்நிய நேரடி முதலீட்டை அனுமதிக்கும் சட்டத் திருத்த மசோதா, மணிப்பூர் சரக்கு-சேவை வரி இரண்டாவது திருத்த மசோதா, மத்திய கலால் சட்டத் திருத்த மசோதா, சுகாதார பாதுகாப்பு மற்றும் தேசியப் பாதுகாப்பு மசோதா, நிதி ஒதுக்கீட்டு மசோதா, வழக்கற்றுப் போன 74 சட்டங்களை ரத்து செய்யும் மசோதா ஆகிய 8 மசோதாக்கள் நிறைவேற்றப்பட்டன.

   ii. மக்களவையில் 137 தனிநபர் மசோதாக்களும், மாநிலங்களவையில் 59 தனிநபர் மசோதாக்களும் அறிமுகப்படுத்தப்பட்டன.

7. உலக சுகாதார அமைப்பின் பாரம்பரிய மருத்துவம் தொடர்பான இரண்டாவது

உலகளாவிய மாநாடு, தில்லி பாரத மண்டபத்தில் தொடங்கி மூன்று நாள்கள் நடைபெற்றது.

8. இந்தியாவில் இருந்து 2025-ஆம் ஆண்டில் அதிக அளவில் வெளிநாட்டு சுற்றுலா மேற்கொண்டதில் 'மில்லினியல்ஸ்' என அழைக்கப்படும் ஜென்-ஒய் (1981 முதல் 1996 வரை பிறந்தவர்கள்) மற்றும் ஜென்- இஸ்ட் (1997-2012 வரை பிறந்த வர்கள்) முன்னிலை வகித்துள்ளனர்.
    i. வெளிநாட்டுப் பயண முன்பதிவு நிதித் தொழில்நுட்ப நிறுவனமான நியோ இது தொடர்பான புள்ளிவிவரங்களை ஆய்வு செய்து இந்தத்தகவலை வெளியிட்டுள்ளது.

    ii. அதன்படி, இந்தியாவில் இருந்து வெளிநாட்டுக்குப் பயணம் மேற்கொண்டவர்களில் முக்கியமாக சுற்றுலாப்பயணம் மேற்கொண்டவர்களில் ஜென்- ஒய், ஜென்-இஸட் தலைமுறையினர் முன்னிலை வகிக்கின்றனர். வெளிநாடுகளுக்குச் சென்றவர்களில் 10-இல் 9 பேர் இந்த இரு பிரிவில்தான் வருகிறார்கள். இவர்களில் 63.8 சதவீதம் பேர் தனியாகப் பயணம் மேற்கொண்டுள்ளனர். 19.93 சதவீதம் பேர் கணவன்-மனைவியாகவும், 12.26 சதவீதம் பேர் குடும்ப உறுப்பினர்களுடனும், 4.01 சதவீதம் பேர் நண்பர்கள் குழுவுடனும் சென்றுள்ளனர். மேலும், குறைந்த செலவுள்ள வெளிநாட்டுச் சுற்றுலாவை அதிகம் நாடியுள்ளனர்.

    iii. இதில் மூன்றில் இரு பங்கு பயணங்களை தில்லி, பெங்களூரு, மும்பை ஆகிய நகரங்களில் வசிப்பவர்கள் மேற்கொண்டுள்ளனர். இதன்மூலம் மெட்ரோ நகரங்களில் அதிகம் பணம் சம்பாதிப்பவர்கள் வெளிநாட்டு சுற்றுலாவுக்கு முன்னுரிமை கொடுப்பதும் தெரியவந்துள்ளது. ஆசிய நாடுகளுக்கும், மத்திய ஆசிய நாடுகளுக்கும் அதிகம் சுற்றுலா சென்றுள்ளனர்.

    iv. 23.08 சதவீதம் பேர் தாய்லாந்து, 21.57 சதவீதம் பேர் ஐக்கிய அரபு அமீரகம், 9.65 சதவீதம் பேர் ஜார்ஜியா, 8.89 சதவீதம் பேர் மலேசியா, 8.8 சதவீதம் பேர் பிலிப்பின்ஸ், 7.38 சதவீதம் பேர் வியத்நாம், 5.6 சதவீதம் பேர் உஸ்பெகிஸ்தான், 5.38 சதவீதம் பேர் பிரிட்டன், 3.78 சதவீதம் பேர் சிங்கப்பூர் சென்றுள்ளனர்.

    v. வெளிநாடுகளில் அவர்கள் செலவிட்ட பணத்தில் 47.28 சதவீத பொருள்களை வாங்குவதற்கும், 20.69 சதவீதம் உணவுக்கும், 19.93 சதவீதம் போக்குவரத்துக்கும், 9.09 சதவீதம் தங்குமிடத்துக்கும் சென்றுள்ளது. 2025-ஆம் ஆண்டு வெளிநாட்டு சுற்றுலா மேற்கொண்ட 10 லட்சம் பேரின் பயண விவரங்களை ஆய்வு செய்து இந்தப் புள்ளிவிவரங்கள் அளிக்கப்பட்டுள்ளன.